**மூன்றாம் நிலைக்கல்வி, மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழும் - 2021**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, ஆணைக்குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும்

முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழுவின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''சிறப்பாகக் திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமத்துடனான தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 47ஆம் பந்தியின் பிரகாரம், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாயப் பெறுமதியிலான வேறுபாட்டின் அடிப்படையில் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த தேறிய பெறுமதி ரூபா 127,468,319 ஆன சொத்துக்கள் தொடர்பில் 2008 ஆம் ஆண்டின் பின்னர் மீள்மதிப்பீடு இடம்பெற்றிருக்கவில்லை. | இந்த சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்குரிய அனைத்து தகவல்களும் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்திற்கிணங்க மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். நிதிப்பிரமாணத்தின் |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வெகுமதிகளாக 2014 ஆம் ஆண்டில் வெளிவாரி நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,760,324 கிரயமான சொத்துக்கள் 2020 ஆம் ஆண்டில் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்களுக்குரிய ரூபா 1,881,720 ஆன திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கம் புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு மீளாய்வாண்டினுள்ளும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் மேற்படி பெறுமானத்தினால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலும் அகற்றப்பட்ட சொத்துக்களுக்காக ஒதுக்கப்பட்ட பெறுமானத்தேய்பு பெறுமதி 2022 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது திருத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | எதிர்வரும் வருடத்தில் கணக்குகளை தயாரிக்கும் போது திருத்தப்பட வேண்டியதுடன் நிதிக் கூற்றுக்களை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 2017 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,879,170 தொகையான இனங்காணப்படாத முற்பண மீதிக்குரிய விரிவான பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2017 ஆம் ஆண்டு முதல் இடம்பெற்ற கணக்கீட்டு கட்டமைப்பு செயலிழப்பு காரணமாக அப்பெறுமதி இருமுறை கணிப்பீடு செய்யப்பட்டமையால் இவ்வேறுபாடு உருவாகியுள்ளது. அதற்குரிய தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | உரிய பட்டோலைகளை கணக்காய்விற்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) மீளாய்வாண்டினுள் திரண்ட நிதியத்திற்கு ஆரம்ப மீதிகளின் சீராக்கமாக ரூபா 1,524,941 கூட்டுத்தொகை செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய | இதன் போது சொத்துக்களை மீள கணக்கு வைக்கும் போது அதற்காக ஒதுக்கப்பட்ட பெறுமானத்தேய்வு பெறுமதிகளும் சீராக்கப்பட | குறித்த சீராக்கங்களுக்காக பேரேட்டு பதிவுகளை முன்வைக்க நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | பேரேட்டுப் பதிவுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வேண்டுமென்பதால் குறித்த சீராக்கல் பதிவுகள் மாற்றப்பட்ட ஒதுக்கங்களின் கணக்குகளில் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. | வேண்டும். |
| (ஈ) | ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வினை கணிப்பீடு செய்யும் போது 03 சொத்து உருப்படிகளுக்குரிய பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 554,518 இனால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டின் மிகை அந்த அளவினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் குறிப்பிடப்பட்டுள்ள 03 சொத்துக்களுக்குரியதாக அதிகமாக கணிப்பிடப்பட்ட பெறுமானத்தேய்வு பெறுமதிகளை திருத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வு ஒதுக்கங்கள் உரிய முறையில் கணிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களினுள் 2017 ஆம் ஆண்டு முதல் பெற வேண்டிய மீதயாக உள்ளடக்கப்பட்ட ரூபா 740,609 தொகை 2021 திசெம்பர் 31 வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள பெற வேண்டிய மீதிகளை அறவிட்டு தீர்ப்பனவு செய்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய மீதிகளை துரிதமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களினுள் 2017 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய மீதிகளாக உள்ளடக்கப்பட்ட ரூபா 1,880,445 கூட்டுத்தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்யுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

வரையிலும் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆணைக்குழுவின் 73 உத்தியோகத்தர்களுக்கு 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 3,538,215 கூட்டுத்தொகையான முற்பணம் மற்றும் Sector Council 02 இற்கு 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 7,640,807 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பணங்களை பரிசோதித்து பார்த்து தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணங்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 396(இ) பிரிவு | வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாத காலங்களை விஞ்சிய ரூபா 1,690,526 கூட்டுத்தொகையான 228 காசோலைகள் தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | வழங்கிய போதிலும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலையின் பெறுமதியை இனங்கண்டு 2022 ஏப்ரல் வங்கி இணக்கக் கூற்றின் மூலம் மீள கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 1646 | தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் நாளாந்த ஓட்டக்குறிப்புக்கள் ஒவ்வொரு மாதமும் நிறைவடைந்து 15 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவின் 12 குழாம் வாகனங்கள் தொடர்பில் குறித்த பிரமாணத்தின் பிரகாரம் ஓட்டக்குறிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015ஆம் இலக்க நிதி சுற்றறிக்கை யினால் திருத்தப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 371(ஆ) பிரமாணம் | ஏதேனும் விசேட பணியொன்றுக்காக ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 ஆன உச்ச எல்லை வரை மாத்திரம் உபகட்டுநிதி வழங்கப்படக் கூடிய போதிலும் அதற்கு முரணாக 03 சந்தர்ப்பங்களில் ரூபா 3,337,874 முதல் ரூபா 4,911,560 வரையிலும் உபகட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | இவ்வாறு உபகட்டுநிதி வழங்குவதற்கு நேர்ந்தது நாடு முழுவதிலும் நடாத்தப்பட்ட தேசிய தொழில்சார் தகைமைகள் பரீட்சைகள் காரணத்தினால் ஆகும். அவ்வாறான போதிலும் இந்த ஆண்டு முதல் உபகட்டுநிதி நிலை ரூபா 100,000 இற்கு மட்டுப்படுத்துவதற்கு வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு அதற்கமைய மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதிய 05/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | தற்போது பெற்றுக் கொள்ளும் சம்பளத்திற்கு மேலதிகமாக சுற்றறிக்கையால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் நீங்கலாக ஏனைய எந்தவித படியொன்றையும் பெற்றுக் கொள்ளாத உத்தியோகத்தர் களுக்காக மாத்திரம் 2017 ஒக்தோபர் 01 ஆந் திகதி முதல் தொழில்சார் படியொன்றினை செலுத்த இயலும் அதற்கு முரணாக அடிப்படைச் | குறித்த உத்தியோகத்தர்களின் நாளாந்த கடமைகளுக்கு புறம்பாக அச்செயற்திட்டத்துடன் கைச்சாத்திடப்பட்ட இருதரப்பு உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கிய பணிகளை நிறைவேற்றுவதற்காக இப்படிகள் செலுத்தப்பட்டுள்ளது. இதன் போது ஒவ்வொரு உத்தியோகத்தரினாலும் செயற்திட்ட நோக்கங்களை | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் இரு படிகளை செலுத்த முடியாது என்பதும் மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை மீள அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சம்பளத்தில் 1/3 ஆன படியொன்றை பெற்றுக் கொள்ளும் ஆணைக்குழுவின் 9 உத்தியோகத்தர்களுக்கு 2018 சனவரி மாதம் முதல் 2021 திசெம்பர் வரையிலும் துறைசார் திறன்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கடமைகளை மேற்கொள்வதற்காக ரூபா 2,655,000 ஆன தொழில்சார் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | நிறைவேற்றவதற்காக மேற்கொள்ளப்படும் படிகளை மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் மாத்திரமே இப்படி செலுத்தப்படுவதுடன் அவ்வாறு நிறைவேற்றப்படும் படிகள் தொடர்பில் திருப்தி கொள்ளாத போது அப்படி உரித்தாகாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அரச வாகனங்கள் தொடர்பில் ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாதங்கள் அல்லது 25,000 கிலோமீற்றர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட பின்னர் கட்டாயமாக எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் பயன்படுத்தப்படும் 12 வாகனங்கள் தொடர்பில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | பதில் கிடைத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு அமைய எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 3,548,803 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 22,164,883 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 25,713,686 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு செயற்திட்ட மானியங்கள் குறைவடைந்தமை மற்றும் தேசிய திறன்கள் சான்றிதழுக்காக பரீட்சை செலவினம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) (i) | 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி அதிகாரச் சட்டத்தின் அதிகாரங்களின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் மதிப்பீட்டாளர்களுக்கான ஒழுக்கவிதிகளுக்கு முரணாக தனியார் நிறுவனமொன்றின் பயிலுனர்களுக்கு மதிப்பீட்டு பணிகள் ஆணைக்குழுவின் மதிப்பீட்டாளர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | குறித்த மதிப்பீடுகள் தொடர்பில் மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டுப் பணிகள் தற்போது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவொன்றின் ஊடாக 2022.05.05 ஆந் திகதி ஆரம்ப விசாரணை பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த அறிக்கை பெறப்படவுள்ளது.<br><br>அக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச்சட்டத்தின் அதிகாரங்களின் பிரகாரம் ஆணைக் குழுவினால் வெளியிடப் பட்டிருந்த ஒழுக்க விதிமுறைகளுக் கமைய மதிப்பீட்ட பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ள அதிகாரங்களின் பிரகாரம் நிறுவனத்தின் பதிவு, பாடநெறிகளுக்காக வெளிவாரி பயிற்சிக் காலம் (On the Job Training) நிறுவன மேற்பார்வை மற்றும் சான்றிதழ் பத்திரங்களை வழங்குதல் தொடர்பில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறைகளிலிருந்து விலகி பதிவு செய்திருந்த தனியார் தொழில்சார் பயிற்சி நிறுவனமொன்றின் பயிலுனர்களுக்காக ஆணைக்குழுவின் சான்றிதழ் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | தேசிய தொழில்சார் தகைமைகள் சான்றிதழ் பத்திரத்தினை வழங்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்படுவது மாணவர் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் நிறுவனத்தினால் தேசிய தொழில்சார் கட்டமைப்பில் உள்ளடக்கப்படும் தரவுகளை ஒப்பிட்டதன் பின்னரே என்பதால் அதன் இரு தேவைப்பாடுகளையும் நிறைவேறியுள்ளமையால் அந்த சான்றிதழ் பத்திரங்கள் இரண்டும் அச்சிடப்பட்டது.<br><br>எனினும், குறித்த நிறுவனங்கள் தொடர்பில் கிடைத்த மக்கள் | |

| | | |
|---|---|---|
| | முறைப்பாடொன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை பணிகள் நிறைவு செய்யப்படும் வரையிலும் குறித்த நிறுவனத்தின் சான்றிதழை வழங்குதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட இரு சான்றிதழ்களும் தேசிய தொழில்சார் தகைமைகள் கட்டமைப்பிலிருந்தும் தற்காலிகமாக அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

## 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலக்குகளை அடைந்து கொள்வதற்காக 08 பிரிவுகளைக் கொண்ட 89 உத்தியோக்தர்களைக் கொண்டுள்ள மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு நிறுவப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்குரியதாக தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அடையப்பட்ட இலக்குகளை ஒப்பிடும் போது 08 பிரிவுகளில் 4 பிரிவுகளின் இலக்குகளை அடைந்து கொள்ளல் 20 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் நிலவியது. | நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக இனங்காணப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | இனங்காணப்பட்ட இலகுக்களை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ஆணைக்குழுவின் சான்றிதழ் பத்திரங்களை வழங்குதல் தொடர்பில் பரீட்சிக்கும் போது 2021 ஆம் ஆண்டில் இலக்கிடப்பட்ட சான்றிதழ் பத்திரங்களை வழங்குதல் | நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக இனங்காணப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | தேசிய மட்டத்தில் திறன்கள் சான்றிதழ் பத்திரத்தினை வழங்குதல் தொடர்பில் கூடிய |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் உள்ளபடியாக வழங்கப்பட்ட சான்றிதழ் பத்திரம் ஆகியவற்றை பரீட்சிக்கும் போது இலக்குகளை அடைதல் 50 சதவீதம் எனும் குறைந்த மட்டத்தில் நிலவியதுடன் 2017 ஆம் ஆண்டு முதல் சான்றிதழ் பத்திரங்கள் வழங்குவதை கருத்தில் கொள்ளும் போது 2021 ஆம் ஆண்டில் 31 சதவீதத்தினால் குறைவடைந்தமை அவதானிக்கப்பட்டது. | | கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் சான்றிதழ் வழங்குதலினை துரிதமாக மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் ஆணைக்குழுவின் தகவல் கட்டமைப்பிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஆரம்பம் முதல் பதிவு செய்திருந்த 1,423 நிறுவனங்களில் 58 சதவீதமான 820 நிறுவனங்கள் மாத்திரம் 2021 ஏப்ரல் 30 அளவில் நிறைவடைந்திருந்த போதிலும் பதிவினை புதுப்பிப்பதற்காக விண்ணப்பித்திருக்கவில்லை எவ்வாறான போதிலும் அறிவுறுத்தல் மேற்கொள்ளப்பட்டு நிறுவன செயற்பாடுகளை புதுப்பிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிவு காலாவதியாகியுள்ள நிறுவனங்களின் பதிவினை புதுப்பிப்பதற்கு தனியான பணிப்பாளர் ஒருவரை நியமித்து தனியான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. | மூன்றாம் நிலை மற்றும் தொலைக்கல்வி அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் இனங்காணப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நாட்டினுள் நடாத்தபப்டும் தொழில்சார் பயிற்சி நிறுவனங்களின் கண்காணிப்பு உரிய முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | 1,423 பதிவு செய்த நிறுவனங்களிடையே செயற்பாட்டில் உள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை 820 மாத்திரம் செயற்பாட்டில் தொழில்சார் பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றமை அவதானிக்கப்பட்டது. | நிறுவனத்தை ஆரம்பித்த நாள் முதல் பதிவு செய்துள்ள நிறுவனங்ளில் பெரும்பாலான நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டதுடன் அவை மூடப்பட்ட நிறுவனங்களாக | மூன்றாம் நிலை மற்றும் தொலைக்கல்வி அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் |

| | |
|---|---|
| பெயரிடுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. | இனங்காணப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நாட்டினுள் நடாத்தபப்டும் தொழில்சார் பயிற்சி நிறுவனங்களின் கண்காணிப்பு உரிய முறையில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |